அவர்களிடமிருந்து உங்களுக்கு என்ன பதில் வேண்டும் என்பதற்கு உங்களிடம் என்ன கேள்வியிருக்கிறது? அதை மட்டும் கேளுங்கள். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: அங்கு விளையாட்டுத் திடலை அமைப்பதற்குப் பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

தொழிற்பயிற்சி நிலையம்

***8441—திரு. N. அசோக்குமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி பகுதியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் 3 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், 20 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் அமைந்துள்ளன. இம்மாவட்டத்திலுள்ள 20 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 4,044 இடங்களில் 1,056 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டு, இன்னும் 2,988 இடங்கள் காலியாக உள்ளன. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலுள்ள 50 சதவிகித அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கான முழு கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொண்டும்கூட,

2022 மார்ச் 23]

இன்னும் 740 இடங்கள் காலியாக உள்ளன. எனவே, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் அதிகமான காலியிடங்கள் உள்ள நிலையில், பேராவூரணியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்திடும் நிலை தற்போது எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.*

முற்பகல் 11–10

திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் முதல் முறையாகப் பேசுகின்ற வாய்ப்பை எனக்கு வழங்கிய முதல்வர்களின் முதல்வர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, தமிழகத்தின் வருங்காலமும், துடிப்புமிக்க இளைஞரணியின் செயலாளருமான, மாண்புமிகு சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களே, மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியிருக்கின்ற எனது தொகுதியான பேராவூரணி தொகுதி மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, கடைமடைப் பகுதியில் உள்ள ஒரு பின்தங்கிய பகுதியாகும். இங்கு வேலைவாய்ப்பின்றி உள்ள இளைஞர்கள் தொழில் கற்றுக்கொள்வதற்கு அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழர்களின், இளைஞர்களின் விடியலுக்கான முதலமைச்சர்*

ஆவார்கள். தமிழ்நாட்டில் உள்ள 91 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், பெரும்பாலான தொழிற்பயிற்சி நிலையங்கள் 40 ஆண்டுகள், 50 ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையில் உபகரணங்களும், தளவாடங்களும் பழுதடைந்த நிலையில் உள்ளன. கட்டடங்களும் சேதமடைந்து உள்ளதால், 71 தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்தும் வகையில் இதுவரையில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, 2,877 கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ள நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேராவூரணி சட்டமன்றத் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். நான் குறிப்பிட்டதைப்போல அங்கே 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், 20 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இருக்கின்ற காரணத்தினால், இப்போது தாங்கள் குறிப்பிட்டிருக்கின்ற இந்தத் தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள், பரிசீலிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நன்றி சொல்லுங்கள்.

திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சமீபத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடத்தி, சுமார் 20,000 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். அதுபோல பேராவூரணி தொகுதியிலும் படித்த இளைஞர்கள் வேலைபெற, வேலைவாய்ப்பு முகாம் நடத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 மார்ச் 23]

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின் அடிப்படையில் இதுவரையில் தமிழ்நாட்டில் 36 இடங்களில் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, சுமார் 50,000-க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு தனியார் தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்றோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடர்ந்து இதுபோன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வேலைவாய்ப்பு முகாம் நடத்த வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றார்கள். நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று, தமிழ்நாடு முழுவதிலும், அனைத்து மாவட்டங்களிலும் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாமை நடத்தி, அந்தந்த மாவட்டங்களில் வேலைவாய்ப்பை நிச்சயமாக உருவாக்கித் தருவோம் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***3857—திரு. எம்.ஆர். காந்தி:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*